ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருக்கடல்மல்லை

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருக்கடல்மல்லை

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் ।
ஸ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் ॥ **1** ॥

ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் ।
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் ॥ **2** ॥

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்பா$_4$ம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் ।
அஸ்மதா$_3$சார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் ॥ **3** ॥

யோ நித்யமச்யுதபதா$_3$ம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம -
வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ரு'ணாய மேநே ।
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தோ$_4$:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ **4** ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் ।
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா ॥ **5** ॥

பூ$_4$தம் ஸரஶ்ச மஹதா$_3$ஹ்வய ப$_4$ட்டநாத$_2$
ஸ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் ।
ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ॥ **6** ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு’ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம: ।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆

படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ‖ **1.1.2** ‖

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.3** ‖

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ‖ **1.1.4** ‖

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆
தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ॥ **1.1.5** ॥

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ॥ **1.1.6** ॥

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.7** ॥

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.8** ॥

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.9** ‖

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.10** ‖

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆
பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ‖ **1.1.11** ‖

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ‖ **1.1.12** ‖

## பெரிய திருமொழி – பாராயது

‡ பார் ஆயதுண்டுமிழ்ந்த பவளத் தூணைப் ⋆
படு கடலில் அமுதத்தைப் பரி வாய் கீண்ட சீரானை ⋆
எம்மானைத் தொண்டர் தங்கள் சிந்தை உள்ளே ⋆
முளைத்தெழுந்த தீம் கரும்பினை ⋆
போர் ஆனைக் கொம்பொசித்த போர் ஏற்றினைப் ⋆
புணர் மருதம் இற நடந்த பொற் குன்றினை ⋆
கார் ஆனை இடர் கடிந்த கற்பகத்தைக் ⋆
கண்டது நான் கடல் மல்லைத் தல சயனத்தே ‖ **2.5.1** ‖

பூண்டவத்தம் பிறர்க்கடைந்து தொண்டு பட்டுப் ⋆
பொய்ந் நூலை மெய்ந் நூல் என்றென்றும் ஓதி மாண்டு ⋆
அவத்தம் போகாதே வம்மின் ⋆
எந்தை என் வணங்கப்படுவானை ⋆
கணங்கள் ஏத்தும் நீண்ட வத்தைக் கரு முகிலை எம்மான் தன்னை ⋆
நின்றவூர் நித்திலத்தைத் தொத்தார் சோலை ⋆
காண்டவத்தைக் கனல் எரிவாய்ப் பெய்வித்தானைக் ⋆
கண்டது நான் கடல் மல்லைத் தல சயனத்தே ‖ **2.5.2** ‖

உடம்புருவில் மூன்றொன்றாய் மூர்த்தி வேறாய் ⋆
உலகுய்ய நின்றானை ⋆
அன்று பேய்ச்சி விடம் பருகு வித்தகனைக் ⋆
கன்று மேய்த்து விளையாட வல்லானை வரைமீ கானில் ⋆
தடம் பருகு கரு முகிலைத் தஞ்சைக் கோயில் ⋆
தவ நெறிக்கோர் பெரு நெறியை வையம் காக்கும் ⋆
கடும் பரிமேல் கற்கியை நான் கண்டு கொண்டேன் ⋆
கடி பொழில் சூழ் கடல் மல்லைத் தல சயனத்தே ‖ **2.5.3** ‖

பேய்த் தாயை முலை உண்ட பிள்ளை தன்னைப் ⋆
பிணை மருப்பில் கருங்களிற்றைப் பிணை மான் நோக்கின் ⋆
ஆய்த் தாயர் தயிர் வெண்ணெய் அமர்ந்த கோவை ⋆
அந்தணர் தம் அமுதத்தைக் குரவை முன்னே கோத்தானை ⋆
குடம் ஆடு கூத்தன் தன்னைக் ⋆
கோகுலங்கள் தளராமல் குன்றம் ஏந்திக் காத்தானை ⋆
எம்மானைக் கண்டு கொண்டேன் ⋆
கடி பொழில் சூழ் கடல் மல்லைத் தல சயனத்தே ‖ **2.5.4** ‖

பாய்ந்தானைத் திரி சகடம் பாறி வீழப் ⋆
பாலகனாய் ஆல் இலையில் பள்ளி இன்பம் ஏய்ந்தானை ⋆
இலங்கொளி சேர் மணிக் குன்றன்ன ⋆
ஈர் இரண்டு மால்வரைத் தோள் எம்மான் தன்னை ⋆
தோய்ந்தானை நிலமகள் தோள் தூதிற் சென்று ⋆
அப்பொய் அறைவாய்ப் புகப் பெய்த மல்லர் மங்கக் காய்ந்தானை ⋆
எம்மானைக் கண்டு கொண்டேன் ⋆
கடி பொழில் சூழ் கடல் மல்லைத் தல சயனத்தே ‖ **2.5.5** ‖

கிடந்தானைத் தடம் கடலுள் பணங்கள் மேவிக் ⋆
கிளர் பொறிய மறி திரிய அதனின் பின்னே படர்ந்தானைப் ⋆
படு மதத்த களிற்றின் கொம்பு பறித்தானைப் ⋆
பார் இடத்தை எயிறு கீற இடந்தானை ⋆
வளை மருப்பின் ஏனம் ஆகி ⋆
இரு நிலனும் பெரு விசும்பும் எய்தா வண்ணம் கடந்தானை ⋆
எம்மானைக் கண்டு கொண்டேன் ⋆
கடி பொழில் சூழ் கடல் மல்லைத் தல சயனத்தே ॥ **2.5.6** ॥

பேணாத வலி அரக்கர் மெலிய அன்று ⋆
பெருவரைத் தோள் இற நெரித்தன்றவுணர் கோனை ⋆
பூண் ஆகம் பிளவெடுத்த போர் வல்லோனைப் ⋆
பொரு கடலுள் துயில் அமர்ந்த புள் ஊர்தியை ⋆
ஊண் ஆகப் பேய் முலை நஞ்சுண்டான் தன்னை ⋆
உள்ளுவார் உள்ளத்தே உறைகின்றானை ⋆
காணாது திரி தருவேன் கண்டு கொண்டேன் ⋆
கடி பொழில் சூழ் கடல் மல்லைத் தல சயனத்தே ॥ **2.5.7** ॥

பெண் ஆகி இன் அமுதம் வஞ்சித்தானைப் ⋆
பிறை எயிற்றன்றடல் அரியாய்ப் பெருகினானை ⋆
தண் ஆர்ந்த வார் புனல் சூழ் மெய்யம் என்னும் ⋆
தடவரை மேல் கிடந்தானைப் பணங்கள் மேவி ⋆
எண்ணானை எண் இறந்த புகழினானை ⋆
இலங்கொளி சேர் அரவிந்தம் போன்று நீண்ட கண்ணானைக் ⋆
கண் ஆரக் கண்டு கொண்டேன் ⋆
கடி பொழில் சூழ் கடல் மல்லைத் தல சயனத்தே ॥ **2.5.8** ॥

தொண்டாயார் தாம் பரவும் அடியினானைப் ⋆
படி கடந்த தாளாளற்காளாய் உய்தல் விண்டானை ⋆
தென் இலங்கை அரக்கர் வேந்தை ⋆
விலங்குண்ண வலங்கை வாய்ச் சரங்கள் ஆண்டு ⋆
பண்டாய வேதங்கள் நான்கும் ⋆
ஐந்து வேள்விகளும் கேள்வியோடங்கம் ஆறும் கண்டானை ⋆
தொண்டனேன் கண்டு கொண்டேன் ⋆
கடி பொழில் சூழ் கடல் மல்லைத் தல சயனத்தே ॥ **2.5.9** ॥

‡ பட நாகத்தணைக் கிடந்தன்றவுணர் கோனைப் ⋆
பட வெகுண்டு மருதிடைப் போய்ப் பழன வேலித் ⋆
தடம் ஆர்ந்த கடல் மல்லைத் தல சயனத்துத் ⋆
தாமரைக்கண் துயில் அமர்ந்த தலைவர் தம்மை ⋆
கடம் ஆரும் கரும் களிறு வல்லான் ⋆
வெல் போர்க் கலிகன்றி ஒலி செய்த இன்பப் பாடல் ⋆
திடம் ஆக இவை ஐந்தும் ஐந்தும் வல்லார் ⋆
தீ வினையை முதல் அரிய வல்லார் தாமே ॥ **2.5.10** ॥

## பெரிய திருமொழி – நண்ணாத

‡ நண்ணாத ⋆
வாள் அவுணர் இடைப் புக்கு ⋆
வானவரைப் பெண் ஆகி ⋆
அமுதூட்டும் பெருமானார் ⋆
மருவினிய தண்ணார்ந்த கடல் மல்லைத் ⋆
தல சயனத்துறைவாரை ⋆
எண்ணாதே இருப்பாரை ⋆
இறைப் பொழுதும் எண்ணோமே ॥ **2.6.1** ॥

பார் வண்ண மட மங்கை ⋆
பனி நன் மா மலர்க் கிழத்தி ⋆
நீர் வண்ணன் மார்வத்தில் ⋆
இருக்கையை முன் நினைந்தவன் ஊர் ⋆
கார் வண்ண முது முந்நீர்க் ⋆
கடல் மல்லைத் தல சயனம் ⋆
ஆர் எண்ணும் நெஞ்சுடையார் ⋆
அவர் எம்மை ஆள்வாரே ॥ **2.6.2** ॥

‡ ஏனத்தின் உருவாகி ⋆
நில மங்கை எழில் கொண்டான் ⋆
வானத்தில் அவர் முறையால் ⋆
மகிழ்ந்தேத்தி வலம் கொள்ள ⋆
கானத்தின் கடல் மல்லைத் ⋆
தல சயனத்துறைகின்ற ⋆
ஞானத்தின் ஒளி உருவை ⋆
நினைவார் என் நாயகரே ॥ **2.6.3** ॥

விண்டாரை வென்றாவி ⋆
விலங்குண்ண மெல் இயலார் ⋆
கொண்டாடும் மல் அகலம் ⋆
அழல் ஏற வெஞ்சமத்துக் கண்டாரை ⋆
கடல் மல்லைத் தல சயனத்து ⋆
உறைவாரைக் ⋆
கொண்டாடும் நெஞ்சுடையார் ⋆
அவர் எங்கள் குல தெய்வமே ॥ **2.6.4** ॥

பிச்சச் சிறு பீலிச் ⋆
சமண் குண்டர் முதலாயோர் ⋆
விச்சைக்கிறை என்னும் ⋆
அவ்விறையைப் பணியாதே ⋆
கச்சிக் கிடந்தவன் ஊர் ⋆
கடல் மல்லைத் தல சயனம் ⋆
நச்சித் தொழுவாரை ⋆
நச்சென்தன் நல் நெஞ்சே ! ॥ **2.6.5** ॥

புலன் கொள் நிதிக் குவையோடு ⋆
புழைக் கை மா களிற்றினமும் ⋆
நலம் கொள் நவமணிக் குவையும் ⋆
சுமந்தெங்கும் நான்றொசிந்து ⋆
கலங்கள் இயங்கும் மல்லைக் ⋆
கடல் மல்லைத் தல சயனம் ⋆
வலங்கொள் மனத்தார் அவரை ⋆
வலங்கொள் என் மட நெஞ்சே ! ॥ **2.6.6** ॥

பஞ்சிச் சிறு கூழை ⋆
உருவாகி மருவாத ⋆
வஞ்சப் பெண் நஞ்சுண்ட ⋆
அண்ணல் முன் நண்ணாத ⋆
கஞ்சைக் கடந்தவன் ஊர் ⋆
கடல் மல்லைத் தல சயனம் ⋆
நெஞ்சில் தொழுவாரைத் ⋆
தொழுவாய் என் தூய் நெஞ்சே ! ॥ **2.6.7** ॥

செழு நீர் மலர்க் கமலம் ⋆
திரை உந்து வன் பகட்டால் ⋆
உழு நீர் வயல் உழவர் உழ ⋆
பின் முன் பிழைத்தெழுந்த ⋆
கழு நீர் கடி கமழும் ⋆
கடல் மல்லைத் தல சயனம் ⋆
தொழு நீர் மனத்தவரைத் ⋆
தொழுவாய் என் தூய் நெஞ்சே ॥ **2.6.8** ॥

பிணங்கள் இடு காடதனுள் ⋆
நடமாடு பிஞ்ஞகனோடு ⋆
இணங்கு திருச் சக்கரத்து ⋆
எம் பெருமானார்க்கிடம் ⋆
விசும்பில் கணங்கள் இயங்கும் மல்லைக் ⋆
கடல் மல்லைத் தல சயனம் ⋆
வணங்கும் மனத்தார் அவரை ⋆
வணங்கென்தன் மட நெஞ்சே ॥ **2.6.9** ॥

‡ கடி கமழும் நெடு மறுகில் ⋆
கடல் மல்லைத் தல சயனத்து ⋆
அடிகள் அடியே நினையும் ⋆
அடியவர்கள் தம் அடியான் ⋆
வடி கொள் நெடு வேல் வலவன் ⋆
கலிகன்றி ஒலி வல்லார் ⋆
முடி கொள் நெடு மன்னவர் தம் ⋆
முதல்வர் முதல் ஆவாரே ॥ **2.6.10** ॥

## பெரிய திருமொழி – வந்து

சங்கு தங்கு தடங்கடல் ⋆
கடல் மல்லையுள் கிடந்தாய் ⋆
அருள் புரிந்திங்கென்னுள் புகுந்தாய் ⋆
இனிப் போயினால் அறையோ ! ⋆
கொங்கு செண்பக மல்லிகை மலர் புல்கி ⋆
இன்னிள வண்டு போய் ⋆
இளந் தெங்கின் தாதளையும் ⋆
திரு ஆலி அம்மானே ॥ **3.5.8** ॥

## பெரிய திருமொழி – கறவா மடநாகு

புள் வாய் பிளந்த ⋆
புனிதா ! என்றழைக்க ⋆
உள்ளே நின்று ⋆
என் உள்ளம் குளிரும் ஒருவா ! ⋆
கள்வா ! ⋆
கடல் மல்லைக் கிடந்த கரும்பே ⋆
வள்ளால் ! உன்னை ⋆
எங்ஙனம் நான் மறக்கேனே ॥ **7.1.4** ॥

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – திருக்குறுந்தாண்டகம்

‡ பிண்டியார் மண்டை ஏந்திப் ⋆
பிறர் மனை திரிதந்துண்ணும் ⋆
உண்டியான் சாபம் தீர்த்த ⋆
ஒருவன் ஊர் ⋆
உலக மேத்தும் கண்டியூர் அரங்கம் மெய்யம் ⋆
கச்சி பேர் மல்லை என்று மண்டினார் ⋆

உய்யல் அல்லால் ⋆
மற்றை ஆர்க்குய்யல் ஆமே ‖ **19** ‖

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – திருநெடுந்தாண்டகம்

வங்கத்தால் மா மணி வந்துந்து முந்நீர் மல்லையாய் ! ⋆
மதிள் கச்சி ஊராய் ! பேராய் ⋆
கொங்கத்தார் வளங்கொன்றை அலங்கல் மார்வன் ⋆
குலவரையன் மடப் பாவை இடப்பால் கொண்டான் ⋆
பங்கத்தாய் ! பாற்கடலாய் ! பாரின் மேலாய் ! ⋆
பனி வரையின் உச்சியாய் ! பவள வண்ணா ⋆
எங்குற்றாய் எம் பெருமான் ! உன்னை நாடி ⋆
ஏழையேன் இங்ஙனமே உழிதருகேனே ! ‖ **9** ‖

## பூதத்தாழ்வார் அருளிச்செய்த – இரண்டாம் திருவந்தாதி

தமர் உள்ளம் தஞ்சை ⋆
தலை அரங்கம் தண் கால் ⋆
தமர் உள்ளும் தண் பொருப்பு வேலை ⋆
தமர் உள்ளும் மாமல்லை கோவல் ⋆
மதிட்குடந்தை என்பரே ⋆
ஏவல்ல எந்தைக் கிடம் ‖ **70** ‖

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – சிறிய திருமடல்

கணமங்கை
காரார் மணி நிறக் கண்ணனூர் விண்ணகரம் ⋆
சீரார் கண புரம் சேறை திருவழுந்தூர் ⋆
காரார் குடந்தை கடிகை கடல் மல்லை ⋆

ஏரார் பொழில் சூழ் இடவெந்தை நீர்மலை ⋆
சீராரும் மாலிரும் சோலை திருமோகூர் ‖ **37** ‖

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – பெரிய திருமடல்

வல்லவாழ்ப்
பின்னை மணாளனைப் பேரில் பிறப்பிலியை ⋆
தொன்னீர்க் கடல் கிடந்த தோளா மணிச் சுடரை ⋆
என் மனத்து மாலை இடவெந்தை ஈசனை ⋆
மன்னும் கடல் மல்லை மாயவனை ‖ **64** ‖

திரு நிலமங்கைத்தாயார் சமேத ச்தலசயநப்பெருமாள் திருவடிகளே சரணம்